Registered as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 21 [03-06-93] வியாழக்கிழமை ஓசை 105

## அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது அரச அதிகாரிகள் கெடுபிடி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள் கொழும்பில் இருந்து அத்தியாவசிய பொருள்களை கப்பல் மூலம் எடுத்து வருவதற்கு கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாக தெரியவருகின்றது. மேற்படி நிறுவனங்கள் முப்படைத் தலைமைச் செயலகத்தினாலும், அத்தியாவசிய சேவைகள் நாயகத்தினாலும் அலைக்கழிக்கப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நிறுவனங்கள் பல முறை படியேறி இறங்கிய போதும் பொருள்களை இங்கு எடுத்துவருவதற்கான அனுமதி கிடைப்பதில்லையெனவும் இந்த அசசார்பற்ற நிறுவனங்களில் ஒன்று ஆறுமுறை நேரில் சென்று முயற்சி மேற்கொண்டபோதும் ஒழுங்கானபதில் கிடைக்காமல் அலைவதாகவும் சர்வதேச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# இஸ்ரேலுடன் ராஜதந்திர உறவு சிறிலங்கா ஏற்படுத்த முயற்சி

## இந்தியாவை பின்பற்ற முடிவு

[கொழும்பு]

இஸ்ரேலுடன் மீண்டும் இராஜதந்திர உறவுகளை ஆரம்பிப்பது குறித்து சிறிலங்கா அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக சிறிலங்கா அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தற்போதைய உலக சூழலில் இந்தியா இஸ்ரேலுடன் நிலையான உறவை கொள்வதால் சிறிலங்காவும் இஸ்ரேலுடன் நிலையான உறவை ஏற்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வைநாடி நின்ற போது இஸ்ரேலுடன் ரகசிய உறவுகளை ஏற்படுத்திக் கொண்டார். இதன் பிரகாரம் இஸ்ரேலிய ஆயுதமும், பயிற்சியும் சிறிலங்காப் படைகளுக்குக் கிடைக்கப்பெற்றது. ஆதே வேளை அமெரிக்க தூதுவராலயத்தில், இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவும் ஏற்படுத்தப் பட்டது.

பின்னர், 1987இல் ஏற்பட்ட இந்திய-சிறிலங்கா சமாதான உடன்படிக்கையின் பிரகாரம் இஸ்ரேலின் உளவுப் படைப் பிரிவான மொசாட் கொழும்பிலிருந்து வெளியேற்றப்பட்டது. இருப்பினும் இஸ்ரேலின் நலன் காக்கும் பிரிவு மூடப் படவில்லை. ஆனால், ஜே. ஆரின் பின் பிரேமதாசா அதிகாரத்திற்கு வந்ததும் இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவை மூடி முஸ்லிம்களின் அபிமானத்தைப்பெற முற்பட்டார்.

தற்பொழுது மீண்டும் இந்தியாவின் வழியைப் பின்பற்றி இஸ்ரேலுடன் இராஜீக உறவை ஏற்படுத்திக் கொள்ள சிறிலங்கா முனைப்பாகச் செயற்படுகின்றது. இஸ்ரேல் என்ற நாடு உதயமாகியதில் இருந்து அதனை அங்கீகரிக்காமல் சுமார் 45 வருடங்களாக இருந்த இந்தியா கடந்த வருடம் இஸ்ரேலுடன் இராஜீக உறவு ஏற்படுத்திக் கொண்டமை தெரிந்ததே.

## பிளவுறும் நிலையில் பொது மக்கள் ஐ.முன்னணி

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலில் சுதந்திரக்கட்சி தலைமையிலான எதிரணிகளின் கூட்டணியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் பெற்ற சில கட்சிகளின் உறுப்பினர்கள் கூட்டணிக்கு எதிராக ஆளும் கட்சியுடன் இணைந்து செயற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான பிரச்சினையை எதிர்வரும் 7ஆம் திகதி சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குழு கூட்டத்தில் எழுப்பசுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் முடிவெடுத்துள்ளனர்.

தென்மாகாணத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரிடர் திலகசேகர ஐ. தே. கவிற்கு ஆதரவு அளிப்பதாகவும் இதற்கு "சன்மானமாக" அவர்தென்மாகாணசபை சபாநாயகர் பதவியை பெறத் திட்டமிட்டுள்ளதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக திலகசேகர தென்மாகாணசபையின் புதிய முதலமைச்சர் அமரசிறியின் காரில் ஒன்றாக சென்

(4ஆம் பக்கம் பார்க்க)

# நொச்சிமோட்டையில் நான்கு புலிகள் வீரச்சாவு

(வவுனியா)

நொச்சிமோட்டையில் கடந்த திங்கட்கிழமை இராணுவத்தினருடனும், புளொட் குழுவினருடனும் ஏற்பட்ட மோதலில் நான்கு விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்தனர்.

இம்மோதலில் வீரச்சாவடைந்த லெப்டினன்ட் நிலான்/காந்தப்பெருமாள் (சண்முகம் யோகராஜா, கோணாவில் கிளிநொச்சி), லெப்டினன்ட் ஜெக்சன்/காவலன் (கந்தையா சுப்பிரமணியம், பம்பைமடு வவுனியா). லெப்டினன்ட் வினோ/விக்கோடியன் (தனபால் சுரேஸ், பண்டிக்கெய்தகுளம் ஓமந்தை) லெப்டினன்ட் பர்சான்/வேதமணி (கந்தையா சக்திவேல், இரண்டாம்படிவம் சேமமடு) ஆகிய நான்கு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

இத் தாக்குதலின்போது ரி-81 ரக துப்பாக்கி - 01, ரவைக்கூடு - 04, கோல்சர்-01, நடுத்தர ரவைகள் - 90 என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத் தாக்குதலின்போது மூன்று புளொட் தேசத்துரோகிகளும், ஒரு சிறிலங்கா இராணுவமும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டமை தெரிந்ததே.





## கிளாலி – பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## ஹேமாவை பா. உ. ஆக்கும் அமைச்சரின் முயற்சிதோல்வி

[கொழும்பு]

முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் மனைவி ஹேமா பிரேமதாசாவை ஐக்கிய தேசியக் கட்சி இதுவரை சந்திப்பிற்கான அனுமதி அவருக்கு கிடைக்கவிலலை எனவும்;

இராஜாங்க அமைச்சர் எச். ஜே. ரணசிங்க பாராளுமன்ற

# சிங்கள அரசிற்கு விமானம் விற்க இஸ்ரேல் விரும்பியது

(கொழும்பு)

சிறிலங்காவிமானப்படைக்கு இஸ்ரேல் சி-130 இராணுவ விமானங்களை 1989இல் வழங்க முன்வந்ததாக இஸ்ரேலிய புலனாய்வுத்துறை முகவர் அரிபென் மெனாஷே என்பவர் தான் எழுதிய புரோபிற்ஸ் ஒஃப் வோர் என்ற நூலில்

விமானங்களை உங்களுக்கு வழங்கமுடியும். இவ்விமானத்தின் ஒரு பிரிவிற்கு 9மில்லியன் அமெரிக்க டொலர்கள் பிடிக்கும். இத்தொகை இயந்திர மீளமைப்பு, தொழிநுட்ப பராமரிப்பு ஆகியவற்றைஉள்ளடக்கியதாக இருக்கும். விமானங்கள் உடனடியாக விநியோகிக்கப்படும். மேதகை வாய்ந்த நீங்கள் இந்தக் கொள்வனவுக்கு அங்கிகாரம்வழங்கினால் பணம் பரிமாற்றலை மேற்கு வங்கி ஒன்றின் மூலம் கையாளலாம். தயவு செய்து பதிலை

(4ஆம் பக்கம் பார்க்க)

மோதலில் நான்கு விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்தனர்.

இம்மோதலில் வீரச்சாவடைந்த லெப்டினன்ட் நிலான்/ காந்தப்பெருமாள் (சண்முகம் யோகராஜா, கோணாவில் கிளிநொச்சி), லெப்டினன்ட் ஜெக்சன்/காவலன் (கந்தையா சுப்பிரமணியம், பம்பைமடு சக்திவேல், இரண்டாம்படிவம் சேமமடு) ஆகிய நான்கு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

இத்தாக்குதலின்போது ரி-81 ரக துப்பாக்கி - 01, ரவைக்கூடு - 04, கோல்சர்-01, ...ணுவமும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டமை தெரிந்ததே.



லெப். நிலான்
(காந்தப்பெருமாள்)



லெப். வினோ
(விக்கோடியன்)



லெப். ஜெக்சன்
(காவலன்)



லெப். பர்சான்
(வேதமணி)

கிளாலி – பூநகரி
## படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

...போது இஸ்ரேலுடன் ரகசிய உறவுகளை ஏற்படுத்திக் கொண்டார். இதன் பிரகாரம் இஸ்ரேலிய ஆயுதமும், பயிற்சியும் சிறிலங்காப் படைகளுக்குக் கிடைக்கப்பெற்றது. இதே வேளை அமெரிக்க தூதுவராலயத்தில், இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவும் ஏற்படுத்தப் பட்டது.

பின்னர், 1987இல் ஏற்பட்ட இந்திய-சிறிலங்கா சமாதான உடன்படிக்கையின் பிரகாரம் நலன் காக்கும் பிரிவு ...படவில்லை. ஆனால், ஜே. ஆரின் பின் பிரேமதாசா அதிகாரத்திற்கு வந்ததும் இஸ்... இஸ்ரேலுடன் இராஜீக உறவை ஏற்படுத்திக் கொள்ள சிறிலங்கா முனைப்பாகச் ... வருடம் இஸ்ரேலுடன் இராஜீக உறவு ஏற்படுத்திக் கொண்டமை தெரிந்ததே.

## ஹேமாவை பா. உ. ஆக்கும் அமைச்சரின் முயற்சி தோல்வி

[கொழும்பு]

முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் மனைவி ஹேமா பிரேமதாசாவை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராக நியமிக்க சில அமைச்சர்கள் எடுத்த முயற்சி பலிக்கவில்லை என 'லத்திவ' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இம்முயற்சியில் அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி ஜனாதிபதி டி. பி, விஜயதுங்காவைச் சந்திக்க பல முயற்சிகளை மேற்கொண்ட போதும் இதுவரை சந்திப்பிற்கான அனுமதி அவருக்கு கிடைக்கவிலலை எனவும்;

இராஜாங்க அமைச்சர் எச். ஜே. ரணசிங்க பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்து அந்த இடத்திற்கு ஹேமா பிரேமதாசாவை நியமிக்குமாறு வேண்டுகோள் விடுக்கவே அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி தலைமையிலான குழு பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகவும்,

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஹேமா பிரேமதாசாவிற்கு 16,000 ரூபா ஓய்வூதியம்

[கொழும்பு]

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவி ஹேமா பிரேமதாசா மாதாந்தம் 16,000 ரூபாவை ஓய்வூதியமாக பெறுவார் என அதிகாரிகள் அறிவித்துள்ளனர். இவருக்கென உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்பட்டுள்ளதுடன் அதிகாரிகள், மெய்ப்பாதுகாவலர் என் போரும் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை; 'நான் ஏற்கனவே ஐ. தே. கவில் அங்கம் வகிக்கின்றேன். நான்நாட்டின் முன்னாள் தலைவரின் மனைவி. நாட்டின் பல இடங்களில் குறிப்பாக ஊவா பகுதியில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டிருந்தேன்.' இவ்வாறு திருமதி ஹேமா பிரேமதாசா ஐலண்ட் பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார். ஆளும் கட்சி அரசியலில் நுழைய விரும்புகிஸ்றீர்களா எனக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எனினும் அவர் தமது எதிர்கால அரசியல் நோக்கு குறித்து மேலும் கருத்துக்கூற மறுத்து விட்டார்.

# சிங்கள அரசிற்கு விமானம் விற்க இஸ்ரேல் விரும்பியது

(கொழும்பு)

சிறிலங்காவிமானப்படைக்கு இஸ்ரேல் சி-130 இராணுவ விமானங்களை 1989இல் வழங்க முன்வந்ததாக இஸ்ரேலிய புலனாய்வுத்துறை முகவர் அரிபென் மெனாஷே என்பவர் தான் எழுதிய புரோபிற்ஸ் ஒஃப் வோர் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இது சம்பந்தமாக அவர் பிரேமதாசாவிற்கு எழுதிய கடிதமும் நூலில் வெளியிடப்பட்டுள்ளது. அதில் ''உங்களது விமானப்படை" தளபதியுடன் பேசியதில் அவர் சி-130 இராணுவப் போக்குவரத்து விமானங்கள் குறித்து கூடிய அக்கறை காட்டினார். நீங்கள் (ஜனாதிபதி பிரேமதாசா) சம்மதித்தால் இஸ்ரேல் விமானப் படையின் பாவனையில் தற்போது நல்லநிலையிலுள்ள ஐந்து சி-130 ஹேர்குலிஸ் போக்குவரத்து இராணுவ விமானங்களை உங்களுக்கு வழங்கமுடியும். இவ்விமானத்தின் ஒரு பிரிவிற்கு 9மில்லியன் அமெரிக்க டொலர்கள் பிடிக்கும். இத்தொகை இயந்திர மீளமைப்பு, தொழிநுட்ப பராமரிப்பு ஆகியவற்றைஉள்ளடக்கியதாக இருக்கும். விமானங்கள் உடனடியாக விநியோகிக்கப்படும். மேதகை வாய்ந்த நீங்கள் இந்தக் கொள்வனவுக்கு அங்கிகாரம்வழங்கினால் பணம் பரிமாற்றலை மேற்கு வங்கி ஒன்றின் மூலம் கையாளலாம். தயவு செய்து பதிலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவிற்கு ஊடாக ஈரானுக்கு இஸ்ரேல் ஆயுதம்

(கொழும்பு)

இஸ்ரேலிய அரசு 1989 யூலையில் அமெரிக்காவிற்கு அறிவிக்காது சி-130 இராணுவ போக்குவரத்து விமானங்களை ஈரானுக்கு இரகசியமாக விற்பனை செய்ய சிறிலங்காவை ஒரு தளமாக பாவிக்க முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா அனுமதி அளித்தார். இப்புதிய தகவலை அரிபென் மெனாஸி என்ற இஸ்ரேலிய புலனாய்வுத்துறை முகவர் ஒருவர் எழுதிய புரோவிற்ஸ் ஒஃப் வோர் என்றநூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரகசிய விற்பனைக்காக தாம் ஜனாதிபதி பிரேமதாசாவை நேரில் சந்தித்து உரையாடியதாகவும் சி-130 விமானங்களை சிறிலங்காவை பாவித்து அதனூடாக இரகசியமாக ஈரானுககு விற்பனை செய்ய உதவினால் அதற்கு வெகுமதியாக சிறிலங்கா

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்தமிழர் பிரச்சினை பிரிட்டிஷ் நிலை என்ன?

(கொழும்பு)

வடக்கு-கிழககு பிரச்சினையும் வட அயர்லாந்து பிரச்சினையும் ஒரே தன்மை வாய்ந்தவை. இனப்பிரச்சினையின் தீர்வாக ஈழக்கோரிக்கையை தீர்வாக பிரிட்டிஷ் மக்கள் பிரதிநிதிகள் சபைஒருபோதும் ஏற்காது என கொழும்பு வந்துள்ள இரு பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ள இக்கருத்தானது, பிரிட்டிஷ் அரசுடையதல்ல என்றும் அப்பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட கருத்து எனவும் பி.பி.சி. தெரிவித்தது.

இலங்கையில் தற்போதைய நிலைமையை அறிய பிரிட்டிஷ் சிறிலங்காக பாராளுமன்ற குழுவின் தலைவர் மைக்கல் மொறிஸ் மக்கள் பிரதிநிதி சபையின் பிரதிசபாநாயகரும் பாராளுமன்ற குழுவின் தற்போதைய தலைவருமான ஜேம்ஸ்கில் ஆகிய இருவரும் கொழும்பு வந்துள்ளனர். நேற்று அவர்கள் செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய போது இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ தீர்வு சாத்தியமாகாது, அரசியல் தீர்வுகாணவேண்டும் என பிரிட்டிஷ் மக்கள் கருதுகின்ற

(4ஆம் பக்கம் பார்க்க)

# வட-கிழக்கு மாகாணங்களை எட்டாக பிரிக்க திட்டம்

## கணேசலிங்கம் முன்வைப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களை எட்டு நிர்வாக மாவட்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் இருந்து எட்டு அங்கத்தவர்களை சட்டவாக்க அமைப்புக்கு தெரிவு செய்யப்படக் கூடியதாக யோசனை ஒன்றை கொழும்பு மாநகர பிரதி மேயர் கே. கணேசலிங்கம் ஐ. தே. க. உபகுழுவிற்கு முன்வைத்துள்ளார்.

மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்றதெரிவுக் குழுவில் ஆராயப்படும் விடயங்கள் தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சி எத்தகைய நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பதை தீர்மானிக்க அக்கட்சி தனியான உபகுழு ஒன்றை அமைத்துள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதிடி.பி. விஜயதுங்கா இக்குழுவிற்கு தலைமைதாங்குகிறார். இந்த குழுவில் அரசியலமைப்பு இராஜாங்க விவகார அமைச்சர் கே. என். சொக்ஸி, வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர், சட்டசிறைச்சாலை அமைச்சர் டிரோன் பெர்ணாண்டோ, ஐ. தே. க. தனாதிகாரியும் கொழும்பு மாநகர பிரதி மேயருமான கே. கணேசலிங்கம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இவ் உபகுழுவிற்கே கே. கணேசலிங்கம் இனப்பிரச்சினையை தீர்ப்பது தொடர்பாக தனது இப் புதிய யோசனையை முன்வைத்துள்ளார்.

அவரது யோசனையின்படி கிளிநொச்சி உள்ளடங்கிய யாழ். மாவட்டம் தனியான ஒரு நிர்வாக மாவட்டம், முல்லைத்தீவு, மன்னார். வவுனியா ஆகியவை தனித்தனியான நிருவாக மாவட்டங்களாக அமையும்.

கிழக்கு மாகாணம் அம்பாறை. மட்டக்களப்பு. திருமலை, கல்முனை ஆகியநான்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

## அதிகார பகிர்வு எண்ணம் விஜயதுங்காவிற்கு இல்லை

### தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா அதிகாரத்தைப் பகிர்ந்து அளிப்பதாகக் கூறியுள்ள போதிலும் பாராளுமன்றத்தின் பல அதிகாரங்களை தம்வசம் வைத்திருப்பதாக மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மந்திரி சபையில் நிதி மந்திரி பதவி உட்பட பல அதிகாரங்களை தொடர்ந்தும் தன்வசம் வைத்திருக்கின்றார். அரசியலமைப்பு மந்திரியை உருவாக்கி அதன் மூலம் தனது அதிகாரங்களை மேலும்வலுப்படுத்துவதே இவரது நோக்கமாகும்.

நாட்டின் முக்கிய பொறுப்புக்கள் அனைத்தையும் இவர் தம்வசம் வைத்திருக்கவே விரும்புகிறார என மேலும் அவர் தெரிவித்தார்.

## திருப்பத்தூர் ரயில் விபத்து 22பேர் பலி; 60பேர் காயம்

தமிழ்நாடு திருப்பத்தூர் அருகேசாம்பல் பட்டியில் நேற்று முன்தினம்இரவு நடைபெற்ற ரயில் விபத்தில் 22பேர் பலியானதுடன் 60 பேர்வரை காயமடைந்தனர்.

மேற்படி ரயில், சரக்கு ரயில் ஒன்றுடன் மோதியதாலேயே இவ்விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்விபத்தில் பலியானோரில் பத்து பேரது சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. காயமடைந்தோரில் 26 பேரினது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது.

# வரி விளம்பரம்


**கார் கசற் றேடியோக்களா? கடிகாரங்களா?**

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து; பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச் அன் ரேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6584)

**பழையதும் புதியதும்**

நாடகம்- அரங்கியல் பழையதும் புதியதும், கலாநிதி சி.மௌனகுரு, தலைவர் நுண்கலைத்துறை கிழக்குப் பல்கலைக்கழகம் பாரம்பரிய நாடகங்கள்பற்றிய ஒப்பீடு. கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-6738)

ஜோ. எகட்டனின்
ஜெசித்தாராவின்
**உணவுப் பார்சல்கள்**
காலை 11.30 மணி முதல்
பகல் 3.00 மணி வரை
கிடைக்கும்.
மீன் / இறைச்சி
ரூபா 30/-
மரக்கறி ரூபா25/-

மாணவர்களுக்கு
விசேட சலுகை
எல்லாவிதமான
உணவு ஓடர்களும்
கவனிக்கப்படும்.

**ஜெசித்தாரா**
சுண்டுக்குளிமகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை,
சுண்டுகுளி
(சி-6718)





## வருடாந்தப் பொதுக்கூட்டம்

வட பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் தென்மராட்சி கிளை – 6இன் 1993ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகசபைத் தெரிவுக் கூட்டம் நாளை(04-06-93) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சங்கத்தின் பணிமனையான புதுச்சந்தை மீசாலைக் கிளையில் சங்கத் தலைவர் திரு. க மகேந்திரன் தலைமையில் இடம் பெறும்.

எனவே அனைத்து உறுப்பினர்களும், அங்கத்தவர்களும் நிலையங்களை பூட்டி இக் கூட்டத்திற்கு சமுகம் தரும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

சிகை அலங்கரிப்பாளர் சங்கம்
(சி-6737) தென்மராட்சி கிளை-6

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## பதவிகள் வெற்றிடம்

(1) கணக்காளர் –பதவி (தற்காலிகம்)
சம்பளம் - 1305 - 60 X 04 - 75 X 11 = 2370
இல. 104: 8
(புதிய சம்பளத்திட்டம்)

தகைமைகள்: கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்றுநிருபம் இல 108/81ன் கணக்காளர் இல.104/6றகு கோரப்பட்ட தகைமைகள்.

(2). களஞ்சியப் பொறுப்பாளர் – பதவி – (தற்காலிகம்)

சம்பளம்: இல: 202:11 (புதிய சம்பளத் திட்டம்)
905 - 40 X 5, 50 X 10 - 1605.

தகைமைகள்: கூட்டுறவு வேலை ஆணைக்குழு சுற்றுநிருபம் இல. 108 / 81ல், களஞ்சியப் பொறுப்பாளர் இல. 202/9ற்கு கோரப்பட்ட தகைமைகள்.

இரு பதவிகளுக்கும் வயதெல்லை-
18 - 40 வயதுக்குட்பட்டவர்கள்.

பிணை - நேரில் அறிவிக்கப்படும்
விண்ணப்ப முடிவுத் திகதி:- 15. 06. 93.

அனுப்பவேண்டிய முகவரி:-

தலைவர்
யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி
சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச்
சங்கங்களின் சமாசம் (வ து)
இல: 111. பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- கல்வித் தகைமைகள், ஏனைய விபரங்கள் சமாச பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.
(சி. 6746)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

## அறிவித்தல்

நாளை 4-6 93 வெள்ளி. காலை 10 மணிக்கு நடைபெறவிருந்த எமது பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் அன்று பி ப. 2-00 மணிக்கு புதிய விஞ்ஞான கல்விக்கழகத்தில் (எழிலகம் முன்பாக) நடைபெறும்.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்வார்கள். புதிய தீர்மானங்கள் பற்றி கலந்துரையாடப்பட வுள்ளது. அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பொது நிர்வாகசபைக் கூட்டம் 1மணிக்கு நடைபெறும்
(சி-6731) –பொதுச்செயலாளர்

## தேவை

(1) கணக்கு பதியுனர் (Accounts Clerk)

தகைமைகள்:–

க. பொ. த. (உ/த) பரீட்சையில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ த. (சா/த)பரீட்சையில் ஆங்கிலம் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் 2 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது,

க. பொ. த. (உ/த) பரீட்சையில் 3 பாடங்கள் சித்தியடைந்திருப்பதுடன்,I. A. B பரீட்சையில் (லண்டன்) சித்தியுடன் 2 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

(2) காசாளர் (Cashier)

தகைமைகள்:–

க. பொ. த. (சா/த) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 5 பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஏனைய பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

வேலை அனுபவத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

மேற்படி வெற்றிடங்களிற்கு தகைமையுடையவர்கள் விண்ணப்பங்களை 09 06 93ஆம்திகதிக்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலம்மா அனுப்பி வைத்தல் வேண்டும்

(சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.)

முகாமையாளர்.
மருந்து பால்மா (தனியார்) வரையுள்ளது,
இல: 484, ஆஸ்பத்திரிவீதி,
(5021) யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப்

பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களில் விண்ணப்பம் செய்யப்படல் வேண்டும். படிவங்களையும் இதர விவரங்களையும் தபால்மூலம் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதி

மீண்டும் யாழ்நகரில்
றொலெக்ஸ் ஸ்தாபனத்தாரின்
**தேன் சிந்தும் ஐஸ்கிறீம்**
வகைகள்!

ஸ்பெசல் ஐஸ்கிறீம் புறூட் சலட் ஐஸ்கிறீம்
சொக்லட் ஐஸ்கிறீம் வனிலா ஐஸ்கிறீம்
மற்றும் சர்பத். கிறீம் சர்பத், ஐஸ் கோப்பி
அனைத்து குளிர்பான வகைகளுக்கும், சுவைமிகு
கோழிப்புரியாணி வகைகளுக்கும் மீண்டும்
★ உங்களை அழைக்கின்றார்கள் ★
"ஹொட்டல் றொலெக்ஸ் ஸ்தாபனத்தார்"
**ஹொட்டல் றொலெக்ஸ்**
84ப, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி 5028)


## நினைவு கூருகின்றோம் ... 1993-06-03

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய-

★ சி. இராமலிங்கம் [ஈச்சிலம்பத்தை, மூதூர் - திருமலை]

★ க. கதிர்காமத்தம்பி [ஈச்சிலம்பத்தை, மூதூர்- திருமலை]

திருமலை - மூதூர் பகுதியிலுள்ள ஈச்சிலம்பத்தைக் கிராமத்தைத் தீயிட வந்த சிங்களக் காடையர்களினால் வெட்டிக் கொல்லப்பட்டு எமைப் பிரிந்த –

★ போளன் [பெரியதம்பி தம்பிராசா - ஈச்சிலம் பத்தை, மூதூர் - திருமலை]

★ கைலாசபிள்ளை மகேஸ்வரன் (ஈச்சிலம் பத்தை, மூதூர் - திருமலை)

1986ஆம் ஆண்டு யாழ் அச்செழுவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

ஸ்ரீபன்/தீபன் (திருநாவுக்கரசு பிரதீபன் - 21, பிரதீபன் வீதி, சுண்டிக்குளி - யாழ்.)

1987ஆம் ஆண்டு யாழ். தொலைத் தொடர்பு நிலையத்தில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய -

2–ம் லெப். அசோக் (சோலையப்பதேவர் நாகராசா - ஆண்டாங்குளம், பிள்ளையார்பிட்டி, அடம்பன் - மன்னார்]

கப்டன் நிக்சன் [கனகசபை முருகதாஸ் - அராலி மேற்கு, வட்டுக்கோட்டை - யாழ்.]

ரதன் (உருத்திரா டினேந்திரா - 115/1, அரசடி வீதி, கந்தர்மடம் - யாழ்.)

1988ஆம் ஆண்டு மட்டு - கருவேப்பங்கேணிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

சுபாஸ் [நடராசா தேவதாஸ் - இருதயபுரம் மேற்கு - மட்டு.]

முல்லைத்தீவு - கருவேலங்கண்டல், ஒட்டிசுட்டான் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

கப்டன் ராகவன் [நாகமணி வரதராசா - தண்ணீரூற்று – முள்ளியவளை]

1989ஆம் ஆண்டு மணலாறு - அலம்பில் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

லெப். அற்றி [கந்தசாமி கருணாகரன் - கோட்டைக் கல்லாறு - மட்டு.]

இதே ஆண்டு தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட மல்லாகத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொது மகன். மற்றும் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். டேவிட் வீதியைச் சேர்ந்த தமிழ்ப்

ரூபா 30/-
மரக்கறி ரூபா25/-

மாணவர்களுக்கு
விசேட சலுகை
எல்லாவிதமான
உணவு ஓடர்களும்
கவனிக்கப்படும்.

**ஜெசித்தாரா**

சுண்டுக்குளிமகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை,
சுண்டுகுளி
(சி-6718)

விண்ணப்ப முடிவுத் திகதி:- 15. 06. 93.

அனுப்பவேண்டிய முகவரி:-

**தலைவர்**
**யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ து)**
**இல: 111. பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**


குறிப்பு:- கல்வித் தகைமைகள், ஏனைய விபரங்கள் சமாச பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.
(சி 6746)

காணும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்

(சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.)

**முகாமையாளர்.**
மருந்து பால்மா (தனியார்) வரையுள்ளது,
இல: 484, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

(5021)




## ரேஸ்ரியின் 2-வது போட்டியில் பரிசு பெற்றோர் விபரம்

| | | இல. | |
|---|---|---|---|
| 1-வது இ. சுரேக்கா | இருபாலை, கோப்பாய். | 1117 | சுவர் மணிக்கூடு |
| 2 வது திருச்செல்வன் | ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை | 1366 | வெள்ளிப் பாத்திரங்கள் |
| 3 வது திருமதி சுகிர்தலிங்கம் | இல 6, 4-ம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். | 1397 | பாடசாலை உபகரணங்கள் |

### ஆறுதல் பரிசுகள் பெற்றோர் விபரம்:

(1) நகுலேஸ்வரி, கந்தையா வீதி, சாவகச்சேரி [1484] (2) வே. சின்னையா அரி, விழிசிட்டி ஏழாலை தெற்கு. சுன்னாகம் [380] (3) ஞானேந்திரன். துன்னாலை தெற்கு கரவெட்டி [796] (4) சிவம், நாகர்கோவில் [1489] (5) ப. இந்திரா, குவனை வீதி, நவின்றல், கரவெட்டி. (717) (6) றியோ, கண்டிவீதி, சாவகச்சேரி, (14-9) (7) கரஞ்சன்நோபல். அரசடி சந்தி, யாழ்ப்பாணம். (1394), [8] திருமதி சுகிர்த லிங்கம். இல. 6, 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம், [1377], [9] ம. ராஜன், புளியடிவளவு, கரணவாய் தெற்கு, கரணவாய் [776]. [10] ப. சத்திய காந்தன், ஊரெழு தெற்கு, சுன்னாகம் [1340]

### ரேஸ்ரியின் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்கான நிபந்தனைகள்:

பியர், ஜாம், அல்லது கோடியல் போத்தல்களில் ஏதாவது ஐந்தைக் கொடுத்து அதற்குரிய பணத்தையும், அதற்குரிய அதிர்ஷ்டலாபச் சீட்டையும் பெற்றுக்கொள்ளவும். ஒவ்வொரு குலுக்கலும் மாதாந்த முடிவில் நடைபெறும்.

### போத்தல்கள் ஒப்படைக்கவேண்டிய இடங்கள்:

(1) ரேஸ்லைன் இன்டஸ்ரீஸ் [தனி] லிமிட்டெட், 14, சீனியர் வீதி, யாழ்ப்பாணம்.
(2) அறிவகம் - சாவகச்சேரி (3) சுபாஸ் பேக்கவுஸ் - நெல்லியடி
(4) சுந்தரம் அன்சன்ஸ், சுன்னாகம் (5) சித்தி விநாயகர் நூல் நிலையம் ஏழாலை மேற்கு. (6) சபாரிஸ், சுண்டுக்குளி. (7) நீதனிQ, சுன்னாகம்.
(8) செ. சுரேஸ் சோமசுந்தரப்புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.
(9) ஸ்கந்தா மாஸ்ரர், சங்கரத்தை சந்தி, வட்டுக்கோட்டை. (10) இ: இராசதுரை பத்திரிகை விற்பனை நிலையம், இருபாலைச்சந்தி.

[சி-6744]

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

உடற்கல்விப் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1993-06-29 வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்: ரூபா 7800—10x260 — 10,400/-

தகைமைகள்:-

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் உடற்கல்விப் பட்டம் அல்லது அதற்குச் சமனான அல்லது உயர் தகைமைகளுடன் பட்டத்தைப்பெற்றதன் பின்னர் பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்தி செயற்படுத்துவதில் குறைந்தபட்சம் 12 ஆண்டு அனுபவம்,

அல்லது

(ஆ) அனுமதிக்கப்பட்ட பட்டப் பின் பட்டம் அல்லது உயர்தொழில் தகைமையைப் பெற்றுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி அவர் அத்தகைய பட்டத்தைப் பெற்றதன் பின்னர் பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்துவதில் குறைந்தபட்சம் 15 ஆண்டு அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது: 45ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு: நேர்முகப் பரீட்சைமூலம்

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20/- ரூபாவை நிதிககிளையில் செலுத்தி இப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் விண்ணப்பம் செய்யப்படல் வேண்டும். படிவங்களையும் இதர விவரங்களையும் தபால்மூலம் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை / தபாற்கட்டளையை 23x10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும். அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனித்து அவர் சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவில்லாமல் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்களும் கவனிக்கப்படும். ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்களுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல.

பதிவாளர்.
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-05-27.

(சி/6427)

ரதன் (உருத்திரா டினேந்திரா - 115/1, அரசடி வீதி, கந்தர்மடம் - யாழ்.)

1988ஆம் ஆண்டு மட்டு - கருவேப்பங்கேணிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**சுபாஸ்** [நடராசா தேவதாஸ் - இருதயபுரம் மேற்கு - மட்டு.]

முல்லைத்தீவு - கருவேலங்கண்டல், ஒட்டிசுட்டான் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் ராகவன்** [நாகமணி வரதராசா - தண்ணீரூற்று — முள்ளியவளை]

1989ஆம் ஆண்டு மணலாறு - அலம்பில் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். அற்றி** [கந்தசாமி கருணாகரன் - கோட்டைக் கல்லாறு - மட்டு.]

இதே ஆண்டு தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட மல்லாகத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன். மற்றும் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். டேவிட் வீதியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். திலக்** [பாலிப்போடி சோமசுந்தரம் - கோயில் போரதீவு - மட்டு ]

**2-ம் லெப். வில்லவன்** [பூபாலபிள்ளை சதானந்தன் - அம்பிலாந்துறை - மட்டு.]

கிளி-ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சூரன்** (மு. வல்லிபுரம் யூட் கௌசீதரன்-இல 91, கிறீன் வீதி, திருமலை)

மட்டு-கல்லடிப்பகுதியில் தேசவிரோத சக்திகள் கைது செய்ய முயன்றபோது, சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**சிவா** (சோமசுந்தரம் சிவகுமார் - நொச்சிமுனை மட்டு.)

1992ஆம் ஆண்டு 29 05. 1992 அன்று வவுனியா-மாமடு இராணுவக் காவலரண் தகர்ப்பின்போது விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய -

**லெப். இளங்கோ/சுரேஸ்மன்** (வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் - புதுக்குளம், சாஸ்திரிகூழாங்குளம், வவுனியா)

யாழ்-பத்தமேனிப் பகுதியில் சிறிலங்கா காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய -

**லெப். ஈழவன்/பிறேம் மாஸ்ரர்** (ஐயாத்துரை சண்முகேஸ்வரன் - தேவரையாளி, நெல்லியடி வடக்கு, கரவெட்டி - யாழ்.)

மணலாறு அலம்பில் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**ஜீவராணி** (மல்லிகா ஜஸ்ரின் - டாக்டர் ஜேம்ஸ் கொன்வென்ற், இளவாலை - யாழ் )

மட்டு-கொக்கட்டிச்சோலை, அரசடித்தீவில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய ஆதரவாளர் -

**கதிர்காமப்போடி கனகரத்தினம்** (அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை - மட்டு.)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

✶ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
(சி/6749)

சிந்தனைக்கு

தூய மலர்போல் தோன்றி, அதன் கீழ் பதுங்கியுள்ள தீய அரவம் போல இருக்கின்றாயே.
- வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 03-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## மேற்கின் கபடம்

மூன்றாம் உலக நாடுகளில் இருந்து இடம் பெயர்ந்து 'அகதிகளாக' ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ளவர்களை இன்று ஏற்றுக்கொள்ள ஐரோப்பிய அரசுகளும், மக்களும் தயாராக இல்லை. இதன் விளைவாக ஐரோப்பிய நாடுகளில் இடம்பெயர்ந்து சென்று வாழும் மூன்றாம் உலக நாட்டவரின் பாதுகாப்பும், வாழ்விட அனுமதியும் இன்று கேள்விக்குரியனவாகியுள்ளன.

இதனை நிரூபிக்குமாப்போல் பல்வேறு சம்பவங்கள், குறிப்பாக ஜேர்மனியில் இடம் பெற்றுள்ளன. இவற்றிற்குச் சிகரம் வைத்தாற்போல் கடந்த வார இறுதியில், இரு சிறுமிகள் உட்பட ஐந்து துருக்கியப் பெண்கள் கொலை செய்யப்பட்டமை அமைந்தது. இதேவேளை கடந்த வார இறுதியில் ஜேர்மனியில் வெளிநாட்டு அகதிகள் வருவதைத் தடை செய்யும் சட்டமூலமும் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டுள்ளது.

இந்நிலையை சுவிட்சர்லாந்திலும் காணலாம். அண்மைக் காலத்தில் ஜேர்மனியருக்கு அடுத்து அந்நிய நாட்டவர் தாக்கப்படுவது சுவிட்சர்லாந்திலேயே அதிகமாகக் காணப்படுகின்றது. அத்தோடு, அந்நிய நாட்டவர் வரவைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அரசும் தீவிரமாகச் செயற்படத் தொடங்கியுள்ளது. இதன் வெளிப்பாடே 2700 இலங்கை அகதிகளை சுவிஸில் இருந்து நாடு கடத்த எடுத்துள்ள முடிவாகும்.

மேலும் இவ்விடயத்தில் நோர்வே, சுவீடன் உட்பட ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தைச் சேர்ந்த சகல நாடுகளும் இதில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. எதிர்காலத்தில் கூட்டு முயற்சியாகவும் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கம் அவர்களுக்கு இருப்பது போலவும் தெரிகிறது.

தமது நாட்டுக்குள் அன்னியர்கள் வருவதைத் தடை செய்வதும், கட்டுப்படுத்துவதும் அந்நாடுகளைப் பொறுத்து சரியான தொன்றாக இருக்கலாம். ஆனால், அதற்காகக் போலியானவையும், உண்மைக்குப் புறம்பானவையுமான - தமக்குச் சாதகமான காரணங்களைத் தேடுவதே தவறானதாகும்.

அதாவது, சுவிட்சர்லாந்து சென்றுள்ள இலங்கை அகதிகளை, குறிப்பாகத் தமிழரைத் திருப்பி அனுப்புவதில் தீவிரமாகச் செயற்படும் சுவிஸ் அர

# வானத்தை பார்த்தபடி கொப்பேகடுவ கிடந்தார்

### மேஜர் ரூபசிங்க விசாரணைக் குழு முன் சாட்சியம்

[கொழும்பு]

லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ வானத்தைப் பார்த்த மாதிரி விழுந்திருந்தார். அவரின் கையிலும் வாயிலுமிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தபோதும் அவர் மூச்சு விட்டுக் கொண்டிருந்தார். மேஜர் ஜயமஹாவும், விமலரத்னவும் முகம் குப்புற விழுந்திருந்தார்கள் என இலங்கை இராணுவத்தின் பீரங்கிப் பிரிவைச் சேர்ந்த மேஜர் ரஞ்சித் ரூபசிங்க தெரிவித்தார்.

ஜெனரல் கொப்பேகடுவ குண்டுவெடிப்பில் கடந்த ஆகஸ்ட்டில் அராலித்துறையில் கொல்லப்பட்டது தொடர்பான விசாரணைகள் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த மூன்று நீதிபதிகள் அடங்கிய குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருவது தெரிந்ததே. இவ்விசாரணையின்போது சாட்சியமளிக்கையிலேயே ரூபசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்து செல்லும்படி ஹெலிகொப்ரருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது அது 10 நிமிடங்களில் அவ்விடத்திற்கு வந்தது. ஹெலிகொப்ரர் விமானியின் உதவியோடு அம்புலன்ஸ் உட்பட ஏனையவற்றைப் பலாலியிலிருந்து ஏற்பாடு செய்யும்படி பணித்தோம். பலாலி விமானத் தளத்தில் அவ்ரோ விமானம் இருந்தது. கொப்பேகடுவவைக் கொழும்பு கொண்டு செல்ல ஏற்பாடு செய்திருந்தோம் டாக்டரும் வந்திருந்தார். இரத்மலானை விமான நிலையத்திலும் அவருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது. ரத்மலானை வரையுமே நான் வந்தேன். மேஜர் ஜயமஹா இறந்து விட்டார்.

1981ஆம் ஆண்டு முதல் நான் வடக்கில் அனுராதபுரத்தில் கொப்பேகடுவவிற்குக் கீழ் கடமையாற்றி வருகிறேன். ஆகஸ்ட் 7 ஆம் திகதி நானும் மேஜரும், அல்விஸ், சமரசிங்கா ஆகியோர் 130 மணியளவில் அனுராதபுரத்தில் இருந்து புறப்பட்டு 35 நிமிட நேரத்தில் பலாலிபோய் இறங்கினோம். அங்கு பிரிகேடியர் விமலரத்னவும். கேணல் விஜேந்திராவும் இருந்தார்கள். அங்கு 2 மணித்தியால கூட்டத்தின் பின்னர் பிரிகேடியர் விமலரத்ன, கேணல் விஜேந்திரா உட்பட நாம் இரு லான்ட்ரோவர்களில் தெல்லிப்பளை சென்றோம். கொப்பேகடுவவும் விமலரத்னவும் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்தார்கள். பிற்பகல் 5 மணியளவில் நாம் காங்கேசன்துறைக்குச் சென்றோம். அங்கு சீமெந்துத் தொழிற்சாலையிலிருந்து ஹெலிகொப்ரர் மூலம் காரைநகர்கடற்படைத் தளத்தை 6 மணியளவில் போய்ச் சேர்ந்தோம்.

மண்டைதீவில் இருந்து கேணல் ஸ்டீவன், கேணல் ஆரியரத்ன ஆகியோர் அங்கு 8.00 மணியளவில் வந்து சேர்ந்த பின்னர் 2 மணிநேர மாநாடு ஒன்று நடைபெற்று சுமார் 10 மணியளவில் முடிவுற்ற பின்னர் மறுநாள் எட்டாம் திகதி காலை எட்டு மணியளவில் அங்கு வரும்படி பணிக்கப்பட்டார்கள்.

மறுநாள் ஊர்காவற்றுறை துறைமுகமேடைக்கு நாம் நடந்து சென்றோம். அங்கு படகு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடற்படை லான்ட் ரோவர் உட்பட 3வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

பிரிகேடியர் திலகரத்ன, பிரிகேடியர் விமலரத்ன ஜெனரல் கொப்பேக்கடுவ ஆகியோர் உட்பட மற்றவர்களும் மூன்று வாகனங்களில் ஏறிக்கொண்டோம்.

மூன்று வாகனங்களும் ஊர்காவற்றுறை - மண்டைதீவு பிரதான வழியில் போய் இடது பக்கத்திற்கு திரும்பி சிறிது தூரம் போய் நிறுத்தப்பட்டன. ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவ்வழியாகப் போய்க் கொண்டிருந்தபோது கொப்பேக்கடுவ அவருடன் போனார் அராலி பொயின்ருக்கு போவதற்கு இரண்டாவதாக இருந்த வாகனம் முதலாவதாக வந்தது. சுமார் 6 அல்லது 7 பாதுகாப்பு வீரர்கள் இறங்கினார்கள். என்னையும் இறங்கும்படி சொன்னார்கள். அந்த வாகனம் மென்மையற்ற தார் றோட்டில் 30 அல்லது 35நிமிடம் வரை அராலி பொயின்ருக்குப் போவதைக் கண்டேன் எதிர்ப்புறத்திலிருந்துஒரு வாகனம் வந்தது, ஹெலிகொப்ரர் ஒன்றும் மேலே பறந்தது.

சுமார் 200மீற்றர் தூரத்தில் அந்த வாகனம் வந்துகொண்டிருந்தபோது ஒரு வளைவு வளைந்து இன்னுமொரு 'கிறவல் பாதைக்குப் போனது. அப்போது கறுப்புப் புகை கிளம்பி வெடிச்சத்தம் ஒன்று கேட்டது. அந்தப்பாதை இந்த வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை.

இதன் போது ஜனாதிபதி சட்டத்தரணி சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார். இதன் போது சாட்சி மேலும் தெரிவிக்கையில் 'பலவேகய' இராணுவ நடவடிக்கையைச் செய்வதற்குநானும் கொப்பேகடுவவோடு ஈடுபட்டிருந்தேன் இராணுவ வாகனங்களின் போக்குவரத்து பற்றி குறிப்பு புத்தகம் இருக்க வேண்டும். நீதியரசர் இஸ்மாயில் கமிஷன் அராலித்துறைக்கு போவதற்கு ஓரிரு நாளைக்கு முன்னர் அனுராதபுரத்திலிருந்து அங்கு போவதற்கு ஆயத்தமாக இருக்கும்படி இராணுவத் தலைமையகம் எனக்கு அறிவித்திருந்தது.

அதன்படி நவம்பர் 16ஆம் திகதி அராலித்துறைக்கு போனேன். இராணுவ புலனாய்வுப் பிரிவிலிருந்து ஒரு கமராவையும் எடுத்துக்கொண்டேன். அங்கு ஒரு படம் எடுத்தேன். விபத்துக்குள்ளான அந்த வாகனம் அங்கு இருக்கவில்லை. அது வேலணையிலிருந்தது. அவ்விடத்தில் இருந்த எண்ணெய் 'பெட்சர்ஸ்' குழியையும் படம் எடுத்தேன். என்றார்.

### தியாகி சிவகுமாரன் நினைவு தினம்

தியாகி பொன். சிவகுமாரனின் 19ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 5.30மணிய

### அமரர் கைலாசபதி நினைவுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ் மன்றம் நடத்தும் அமரர் பேராசிரியர் க. கைலாசபதியின் நினைவுக் கூட்டம் இன்று பிற்பகல் நான்கு மணியளவில் கைலாசபதி கலைய

### ஆங்கில ஆசிரியர் வரவேற்பு

(கொழும்பு)

அரச பாடசாலைகளில்

## நகர சுத்திகரிப்பாளர் வீடு சிங்களவரால் தீக்கிரை

### வியாங்கொடையில் சம்பவம்

(கொழும்பு)

வியாங்கொடையின் ஒரு பகுதியில் குடியிருக்கும் நகர சபை தொழிலாளர்களுக்கும் அப்பகுதி சிங்களவர்களுக்கும் இடையில் ஏற்பட்டமோதலில் 7 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. பல நகரசபை தொழிலாளர்கள் காயமுற்றனர். பலர் வெட்டுக் காயங்களிற்குள்ளாகினர்.

இப்பகுதியிலுள்ள மேற்படி தொழிலாளர்களின் காணிகளையும் வீடுகளையும் இப்பகுதிக்கு சென்ற சிங்களவர் சிலர் சுவீகரிக்க முற்பட்டதையடுத்து எழுந்த வாக்குவாதமே கோஷ்டிச் சண்டையாக மாறியது. இங்கு 40 நகர சுத்தி தொழிலாளர் குடும்பங்கள் வசிக்கின்றன.

## ரிச்சார்ட் டி சொய்சா கொலை சுதந்திர விசாரணை நடத்த

### எதிரணியினர் கோரிக்கை

[கொழும்பு]

பத்திரிகையாளர் ரிச்சார்ட் டி சொய்சாவின் கொலை குறித்து விசாரணை நடத்த சுதந்திரமான விசாரணைக் குழுவை அமைக்குமாறு மீண்டும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தை கோரவுள்ளனர்.

இதே சமயம் கடந்த காலங்களில் நடைபெற்ற பல்வேறு அரசியற் கொலைகள் மற்றும் காணாமற் போன சம்பவங்கள் குறித்து எடுக்கப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி ஆராய விரைவில் எதிர்க்கட்சித் தலைவர்கள் சந்திக்கவுள்ளனர் என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

## அரசியல்வாதிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

இனந்தெரியாத நபர்களிடமிருந்து கொலைப் பயமுறுத்தல் இருப்பதாகக் கருதப்படும் அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சிற்கு அரசாங்கம் பணிப்புரை விடுத்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்திற்கு முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்ட பொலிசாரைமீளப் பெறவேண்டாமென அறிவுரை கூறியிருக்கிறது.

இதற்கான உத்தரவுகளை பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா நேரடியாக விடுத்திருப்பதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

இதேவேளைஅரசாங்கத்தின் இந்த புதிய உத்தரவின் கீழ் தற்பாதுகாப்புக்காக என்ற பெயரில் ஆயுதங்களை வைத்திருப்போரை பாதுகாப்புப் படையினர் கைது செய்ய வழியேற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## ஆயுதப் பயிற்சியின் போது 6 பொலிசார் காயம்

### துப்பாக்கி கட்டுப்பாடின்றி இயங்கியதாம்

(கொழும்பு)

ஆயுதப் பயிற்சியின் போது துப்பாக்கி கட்டுப்பாடின்றி இயங்கியதால் 6 பொலிசார் காயமடைந்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: பொலிசாருக்கான விசேட ஆயுதப் பயிற்சியின் போது ஒரு தொகுதி பொலிசார் ரி-56 துப்பாக்கியை இயக்கும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் ஒருவர் இயக்கிய துப்பாக்கி அவரது கட்டுப்பாட்டை மீறி இயங்க ஆரம்பித்ததினால் பயிற்சியிலீடுபட்டிருந்த 6 பொலிசார் காயமடைந்தனர்.

ரி-56 துப்பாக்கியின் இயக்கு விசையில் ஏற்பட்ட கோளாறே மேற்படி சம்பவத்திற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த பொலிசார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## செஞ்சிலுவை சேவைக்கு அபேசிங்க பாராட்டு

[தொல்புரம்]

தில் தொடர்ந்து திரு. அபே

இலங்கை அகதிகளை சுவிஸில் இருந்து நாடு கடத்த எடுத்துள்ள முடிவாகும்.

மேலும் இவ்விடயத்தில் நோர்வே, சுவீடன் உட்பட ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தைச் சேர்ந்த சகல நாடுகளும் இதில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. எதிர்காலத்தில் கூட்டு முயற்சியாகவும் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கம் அவர்களுக்கு இருப்பது போலவும் தெரிகிறது.

தமது நாட்டுக்குள் அன்னியர்கள் வருவதைத் தடை செய்வதும், கட்டுப்படுத்துவதும் அந்நாடுகளைப் பொறுத்து சரியான தொன்றாக இருக்கலாம். ஆனால், அதற்காகக் போலியானவையும், உண்மைக்குப் புறம்பானவையுமான - தமக்குச் சாதகமான காரணங்களைத் தேடுவதே தவறானதாகும்.

அதாவது, சுவிட்சர்லாந்து சென்றுள்ள இலங்கை அகதிகளை, குறிப்பாகத் தமிழரைத் திருப்பி அனுப்புவதில் தீவிரமாகச் செயற்படும் சுவிஸ் அரசாங்கம் இலங்கையில் இனப்பிரச்சினை என்பது இல்லை என்ற ரீதியில் பேச முற்படுவதுதான் தவறானதாகும். இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சினை காரணமாக பல்லாயிரக் கணக்கில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களின் பொருளாதார வாழ்வு அழிக்கப்பட்டுள்ளது. இராணுவ ஆக்கிரமிப்பால் மக்கள் தமது வாழ்விடங்களையும், கிராமங்களையும் விட்டு விரட்டப்பட்டுள்ளார்கள். எரிபொருள் தடை, மீன்பிடிக்கத் தடை, உரம் மீது தடை போன்ற பொருளாதாரத்தை முடக்கும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுள்ளது. இந்நிலையில், இங்கு இனப்பிரச்சினை முன்னர் போல் இல்லை எனக் கூறுவது உண்மைக்குப் புறம்பானதாகும்.

அத்தோடு, கொழும்பில் தமிழர்கள் பாதுகாப்பாக வாழ்கின்றனர் எனக் காரணம் கற்பிக்க முற்படுவதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. கொழும்பில் தமிழர்கள் எவ்வளவு பயபீதியுடன் வாழ்கின்றார்கள்-நடமாடுகின்றார்கள். அங்குதமிழர்கள் காரணமின்றிக் கைது செய்யப்படுகின்றார்கள். தடுத்து வைக்கப்படுகின்றார்கள். ஒவ்வொருவரும் ஒரு கைதிகள்போல் உள்ளனர்என்பதேஉண்மை. அவர்கள் வாழ்வதற்கும், நடமாடுவதற்கும் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனை மேற்குலகின் பார்வையில் பாதுகாப்பான, சுதந்திரமான வாழ்க்கை எனக் கூற முடியுமா?

அந்நிய நாட்டவர்களை வெளியேற்ற வேண்டும் என எண்ணினால், தமது தேச நலனின் அடிப்படையில் உண்மையான காரணத்தை மேற்குலகம் கூறவும். ஐரோப்பாவில் இருந்து வரும் அகதிகளுக்கு இடம் அளிக்க வேண்டும். வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். பொருளாதார மந்த நிலையால் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாமல் உள்ளது. இந்நிலையில், மூன்றாம் உலகத்தவரை வெளியேற்ற வேண்டியுள்ளது என வெளிப்படையாகக் கூறுதல் நல்லது.

இதைவிடுத்து சர்வதேச மனித உரிமைகள், அகதிகளுக்கான சர்வதேச சட்டங்கள் என்பனவற்றின் பிதாமகர்கள் எனவும், பாதுகாவலர்கள் எனவும் தம்மைக் கூறிக்கொண்டு உண்மைக்குப் புறம்பான காரணங்களைக் கொண்டு வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபடுவது நியாயமான வழிமுறையல்ல. இது ஒரு அரசியல் கபடத்தனமாகும்.

---

பேகடுவவைக் கொழும்பு கொண்டு செல்ல ஏற்பாடு செய்திருந்தோம். டாக்டரும் வந்திருந்தார். இரத்மலானை விமான நிலையத்திலும் அவருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது. ரத்மலானை வரையுமே நான் வந்தேன். மேஜர் ஜயமஹா இறந்து விட்டார்.

1981ஆம் ஆண்டு முதல் நான் வடக்கில் அனுராதபுரத்தில் கொப்பேகடுவவிற்குக் கீழ் கடமையாற்றி வருகிறேன். ஆகஸ்ட் 7 ஆம் திகதி நானும் மேஜரும், அல்விஸ், சமரசிங்கா ஆகியோர் 130 உட்பட மற்றவர்களும் மூன்று வாகனங்களில் ஏறிக்கொண்டோம்.

மூன்று வாகனங்களும் ஊர்காவற்றுறை - மண்டைதீவு பிரதான வழியில் போய் இடது பக்கத்திற்கு திரும்பி சிறிது தூரம் போய் நிறுத்தப்பட்டன. ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவ்வழியாகப் போய்க் கொண்டிருந்தபோது கொப்... வத் தலைமையகம் எனக்கு அறிவித்திருந்தது.

அதன்படி நவம்பர் 16ஆம் திகதி அராலித்துறைக்கு போனேன். இராணுவ புலனாய்வுப் பிரிவிலிருந்து ஒரு கமராவையும் எடுத்துக்கொண்டேன். அங்கு ஒரு படம் எடுத்தேன். விபத்துக்குள்ளான அந்த வாகனம் அங்கு இருக்கவில்லை. அது வேலணையிலிருந்தது. அவ்விடத்தில் இருந்த எண்ணெய் 'பெட்சர்ஸ்' குழியையும் படம் எடுத்தேன். என்றார்.

## தியாகி சிவகுமாரன் நினைவு தினம்

தியாகி பொன். சிவகுமாரனின் 19ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 5.30மணியளவில் உரும்பராய் சிவகுமாரன் நினைவாலயத்தில் இடம் பெறவுள்ளது. ஈகைச்சுடர், தேசியக்கொடி என்பனஏற்றப்பட இருப்பதுடன், மாவீரன் சிவகுமாரனின் உருவப்படத்திற்கு மலர்மாலை சூட்டப்படுதலும், பின்னர் மாலை ஏழு மணிக்கு பொதுக்கூட்டமும் இடம்பெறவுள்ளது.

## அமரர் கைலாசபதி நினைவுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ் மன்றம் நடத்தும் அமரர் பேராசிரியர் க. கைலாசபதியின் நினைவுக் கூட்டம் இன்று பிற்பகல் நான்கு மணியளவில் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்ச்சியில் பேராசிரியர் பாலகிருஷ்ணன், விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் கா. சிவத்தம்பி, செல்வன் பா. மகாசிங்கசிவம் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தவுள்ளனர்.

## ஆங்கில ஆசிரியர் வரவேற்பு

(கொழும்பு)

அரச பாடசாலைகளில் ஆண்டு ஒன்று அனுமதியில் மாற்றம் செய்வது தொடர்பான அரசின் திட்டத்தை அகில இலங்கை அரசாங்க ஆங்கில ஆசிரியர்கள் சங்கம் வரவேற்றுள்ளது. இது தொடர்பான ஆலோசனைகள் அடங்கிய மகஜர் ஒன்றை மேற்படி சங்கம் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவுக்கு அனுப்பியுள்ளது.

## 6 பொலிசார் காயம்

### துப்பாக்கி கட்டுப்பாடின்றி இயங்கியதாம்

(கொழும்பு)

ஆயுதப் பயிற்சியின் போது துப்பாக்கி கட்டுப்பாடின்றி இயங்கியதால் 6 பொலிசார் காயமடைந்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: பொலிசாருக்கான விசேட ஆயுதப் பயிற்சியின் போது ஒரு தொகுதி பொலிசார் ரி-56துப்பாக்கியை இயக்கும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் ஒருவர் இயக்கிய துப்பாக்கி அவரது கட்டுப்பாட்டை மீறி இயங்க ஆரம்பித்ததினால் பயிற்சியிலீடுபட்டிருந்த 6 பொலிசார் காயமடைந்தனர்.

ரி-56 துப்பாக்கியின் இயக்குவிசையில் ஏற்பட்ட கோளாறே மேற்படி சம்பவத்திற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த பொலிசார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## செஞ்சிலுவை சேவைக்கு அபேசிங்க பாராட்டு

[தொல்புரம்]

இலங்கையில் உள்ள செஞ்சிலுவைச் சங்கக் கிளைகளில் மிகவும் சிறப்பான முறையில் இயங்குவது வடமாகாணத்தின் யாழ்ப்பாணக்கிளை ஆகும் எனக் கடந்த வாரம் அளவில் யாழ் நகருக்கு வருகை தந்திருந்த இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கொழும்புத் தலைமையகத்தின் தலைவர் திரு டி.டி. அபேசிங்க தெரிவித்தார்.

யாழ். செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் டாக்டர் திரு. எஸ். சிங்கராயர் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தொடர்ந்து திரு. அபேசிங்க உரையாற்றுகையில்,

யாழ். குடாநாட்டு மக்கள் போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளின்றி அல்லல்படுவதை தான் நேரில் காண முடிந்ததாகவும், இப்படியான துர்ப்பாக்கிய நிலையை சிறிதளவாகுதல் நீக்க செஞ்சிலுவைச்சங்கம் உதவும் எனவும், இந்து, பௌத்த தர்மம் அன்பையும், சமாதானத்தையும் போதிக்கின்றன. அம்மதங்களைச்சார்ந்த நாம் அனைவரும் சகோதரர்களே எனவும் உரையாற்றும் போது கூறினார். [41]

## இடம் பெயர்ந்தோருக்கு கிராஞ்சியில் வீடுகள்

(கிளிநொச்சி)

அல்லைப்பிட்டிப் பகுதியில் இருந்தும் ஏனைய இடங்களில் இருந்தும் சமகால சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து கிராஞ்சிப் பகுதியில் குடியேறி உள்ளவர்களுக்கென நூறு வீடுகள் இலங்கை செஞ்சிலுவைச்சங்க கிளிநொச்சிக் கிளையின் உதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் அறுபது வீடுகள் உடனடித் தேவைக்கென அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (16)

## முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம் குருநகர் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் முத்தமிழ் விழாவும் சிறந்த மாணவனுக்கு உயர் விருது வழங்கிப் பாராட்டும் வைபவமும் இன்று காலை 10மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த வைபவத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேலாயுதம் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக விடுதலைப்புலிகள் கல்விப் பொறுப்பாளர் இளங்குமரன், அவர்களும் விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவு பொறுப்பாளர் செல்வி மாலினி, விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் இதயன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## மருந்து தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அனேக அரசினர் வைத்தியசாலை, மத்திய மருந்தகங்களில் சில மருந்து வகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மலேரியா, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்களுக்கான மருந்து வகைகளுக்கும், அம்பிசிலின் மற்றும் சில அத்தியாவசிய மருந்துகளுக்குமே இங்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவ் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு சிகிச்சை பெற வருகின்ற நோயாளர்கள் வைத்தியசாலை மத்திய மருந்தகங்களில் மருந்துவகைகள் இல்லாததால் நோயாளிகள் தனியார் மருத்துவமனைகளில் அதிக கூடிய விலைக்குப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ராஜீவ்காந்தி நினைவாலயத்திற்கு

# அடிக்கல் இடும் நாள் முதல் சாகும்வரை உண்ணாவிரதம்

### இந்து மதகுரு எச்சரிக்கை

(டில்லி)

சிறிபெரம்புதூரில் ராஜீவ் காந்தி நினைவாலயத்திற்கு அடிக்கல் நாட்டப்படுகின்ற நாள் முதல் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக இந்து மத குருவான எதிராஜா அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

முன்னாள் விமானப்படை அதிகாரியான எதிராஜா மேலும் கூறுகையில்; தேர்தல் பிரசாரத்தின் போது ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட இடம் தனது நிருவாகத்திலான ஆலயம் ஒன்றுக்கு சொந்தமானது என்றும் அந்த நிலம் தொடர்பாக கோயிலுக்கு இருக்கும் ஆட்சியுரிமையை உறுதிப்படுத்துவதற்காக நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், ராஜீவ் கொலையுண்ட பகுதி அடங்கிய நிலத்தை நாற்பது லட்சம் ரூபாவுக்கு அரசாங்கத்துக்கு விற்பனை செய்ய முன்வந்ததாகவும் அந்தப் பணத்தை ராஜீவ் காந்தி பெயரில் பாடசாலை அல்லது வைத்தியசாலை ஒன்றை நிறுவுவதற்கு பயன்படுத்துவதாகவும் தாம் கோரிய போது தமது கோரிக்கையை அரசு அலட்சியம் செய்து விட்டதாகவும் தெரிவித்தார்.

## அகதிகள் வரவைத் தடுக்க ஐரோப்பிய சமூகம் இணக்கம்

(லண்டன்)

சட்டவிரோதமாகக் குடியேறும் அகதிகளைத் தடுக்க ஐரோப்பிய சமூக நாடுகள் புதிய வழிமுறைகளைக் கையாளத் தமக்குள் இணங்கியுள்ளன.

குடிவரவுச் சட்டங்களை மீறிக் குடியமரும் வெளிநாட்டவர்களை உடனடியாக வெளியேற்றுவதற்கான சட்டங்கள் ஆக்கப்படவுள்ளன.

பொஸ்னிய போரினால் வெளியேறும் அகதிகளுக்கு இடங்கொடுக்க மறுக்கவும் கொப்பன்ஹேகனில் கூடிய ஐரோப்பிய சமூக நாடுகளின் உள்துறை அமைச்சர்கள் தீர்மானித்துள்ளார்கள். போரினால் இடம்பெயர்பவர்களுக்கு அவர்கள் வதிவிடங்களுக்கு அருகாமையிலேயே புனர்வாழ்வு மையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டதுடன், ஐரோப்பிய நாடுகள் அவர்களை அகதிகளாக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதன்பிரகாரம் ஐரோப்பிய நாடுகளில் அனுமதியில்லாமல் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் அனைவரும் வெளியேற்றப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஈழநாதம்

## போட்டி

நீர்வேலிக் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையேயான மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2-00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் கொத்தணி அதிபர் வீ. கணேசராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

## சிறிலங்கா

இராணுவத்திற்கான இஸ்ரேலிய உதவி அதிகரிக்கப்படும் என பிரேமதாசாவிடம் தாம் உறுதிமொழி அளித்ததாகவும் இந்த இஸ்ரேலிய புலனாய்வு முகவர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பிரேமதாசாவுடனான சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றதாகவும் இச்சந்திப்பை அப்போதைய த[illegible] வல்துறை அமைச்சரே ஏற்பாடு செய்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் விடுதலைப் புலிகளின் ஆயுதக்கொள்வனவிற்கு இஸ்ரேல் பணம்வழங்குவது என புலிகளுடன் நடந்த பேச்சுகளில் முடிவானது. இதற்கான ஆயுதங்களை பாலஸ்தீன விடுதலை அமைப்பிடம் இருந்து வாங்குவது என்றும்முடிவெடுக்கப்பட்டது. எனினும் இதுபின்னர் சாத்தியமாகவில்லை என்று அந்நூல் கூறுகிறது.

## வெளிநாட்டு தலைவர்களின் அதிகாரம் குறித்து ஆராய்வு

இந்தியா, ஜேர்மனி, சுவீடன் ஆகிய நாடுகளின் நாட்டின் தலைவருக்கு உள்ள அதிகார வரையறை, தெரிவான உறுப்பினர்களின் சுதந்திரம், தேர்தல் முறை என்பவை குறித்து எதிரணியினர் தற்போது ஆராய்ந்துள்ளனராம். இத்தகவலை சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா வெளியிட்டுள்ளார்.

## கலந்துரையாடல்

யாழ். குடா நாட்டிலுள்ள அரச, தனியார் நிறுவனங்களிலும், தனிப்பட்ட ரீதியிலும் நில அளவையிலீடுபட்டுள்ள அனுமதிபெற்ற, அனுமதி (லைசென்ஸ்) பெறாதசகலநில அளவையாளர்களினதும் கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 9 00 மணியளவில் கோண்டாவிலில் அமைந்துள்ள மாவட்ட அரசியல் பணிமனையில் நடைபெற உள்ளது. இதில்சகல நில அளவையாளர்களையும் பங்குபற்றுமாறு நிர்வாகத் துறையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

## கூட்டம்

தமிழீழக் கல்விமேம்பாட்டுப் பேரவைக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பேரவை மண்டபத்தில் நடைபெறும். பேரவை உறுப்பினர் அனைவரும் பங்குபற்றுமாறு வேண்டப்படுகின்றனர்.

## கண்காட்சி

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தினால் நடாத்தப்படும் ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவியம், சிற்பம், புகைப்படம், ''சித்த மருத்துவக் கண்காட்சியில்'' எமது சங்கத்தின் சார்பில் அமைக்கப்பட்டசித்த மருத்துவக்காட்சியறையில் எம்மால் உற்பத்தி செய்யப்பட்டு, வெளியிடப்பட்டு, வைக்கப்பட்டிருக்கும் மருந்துகளையும், எமது புதிய ஆக்கங்களையும் பார்வையிட்டுப் பயன் பெறும் வண்ணம் அனைத்துப்பனை, தென்னைவளஅபிவிருத்திக்கூட்டுறவு சங்கஉறுப்பினர்கள், பணிப்பாளர். பணியாளர்கள், மகளிர்குழுக்களுடன் அனைத்துத் தமிழீழ மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காலம்: 1993, யூன் மாதம் 04, 05,06 ஆந்திகதிகள்.

இடம்: யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமிமண்டபத்தில் எமக்கு தனித்துவமாக ஒதுக்கப்பட்ட காட்சி அறையில்.

இல. 572, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள். யாழ்ப்பாணம்.
1993-06-02 (5025)

## தேவை

லேத் (கடைச்சல்) வேலைக்கு அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

5-ம் திகதி மு.ப. 10-00மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

தொடர்பு:
ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். [5018]

## 1 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தமிழ்த் தாய் மடியில்: 12 ★ 09 ★ 1969

வீரமண்ணின் முளையில்: 03 ★ 06 ★ 1992

## லெப்டினன்ட் ஈழவன்

## சைன் கல்வியகம்

### கோப்பாய்

பெண்களுக்கான மனையியல் கைத்திறன் டிப்ளோமா பயிற்சிகள்

### 5. 6. 93 புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன

★ தையற்கலை ★ கேக் ஐசிங்
★ பூவேலை (ஸ்டோக்கிங் பூவேலைகளும் காட்டிக் கொடுக்கப்படும்)
★ கைப்பணி ★ சமையற்கலை
★ கூந்தல் அலங்காரம்

ஆறுமாத பயிற்சிமுடிவில் சித்தியெய்திய மாணவிகளுக்கு Diploma in Home Economics Fine Arts சான்றிதழ் வழங்கப்படும். சேரவிரும்பும் மாணவிகள் நிலையத்தில் சந்திக்கவும்.

பருத்தித்துறை வீதி, — கோப்பாய்.
(சி/6756)

## SCIENCE COLLEGE

### விஞ்ஞானக் கல்லூரி

பெருமாள் கோவில் அருகாமை, யாழ்ப்பாணம்.

### 95 A/L

ஆரம்பம்: 3-06-93 வியாழன் 4-30 p. m.

தூய பிரயோக கணிதம்
திரு. குணசிங்கம், B. Sc. (Hons.)

விலங்கியல்
திரு. ஈஸ்வரதாசன், B.Sc (Cey.) Dip in Ed.

★ 95 A/L ஆரம்பத்தில் இருந்து அனுமதி வழங்கப்படும்.
★ 94 A/L புதிய விலங்கியல் வகுப்பு ஆரம்பமாகவுள்ளது
★ 93 A/L Zoology Model Question Paper Class ஆரம்பமாக உள்ளது.
★ நேர அட்டவணையை நிறுவனத்தில் பெறலாம்.

(சி-6729) —நிர்வாகி

## ஈழத்தமிழர்

...னர் எனவும் குறிப்பிட்டனர்.

மேலும் கிழக்கு மாகாணத்தின் கரையோர பாதுகாப்பிற்குப் பயன்படுத்த ரோந்துப் படகுகளை சிறிலங்காவிற்கு வழங்குவது குறித்து ஆராயப்படும் என இவர்கள் தெரிவித்தனர்

இவர்கள் டி.பி. விஜயதுங்க, சிறிமாவோ பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆகியோரை சந்தித்துள்ளனர். இனப்பிரச்சினைக்கு தீர்வு காண புதிய ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா முயற்சிகளை மேற்கொள்வார் என அவர்கள் நம்பிக்கை வெளியிட்டனர்.

## சிங்கள

உங்கள் நாட்டிலுள்ள எமது முகவர் ஊடாக அனுப்பவும். எமது முகவர், குளோப் வர்த்தக ஏஜென்சி லிமிட்டெட் 40/1, டிக்மன்ஸ் வீதி, கொழும்பு. உங்கள் பதிலை எதிர்பார்க்கின்றோம்'' என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஹேமாவை

அதன் ஒரு கட்டமாகவே ஜனாதிபதியை சந்திக்க அவர்கள் விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை திருமதி ஹேமா பிரேமதாசா தற்பொழுது சுகவீனமுற்று இருப்பதாகவும் அவருக்கு தறபோது பூரண ஓய்வு தேவை என வைத்தியர்களால் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் 'லக்திவ' பத்திரிகை மேலும்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 02-06-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9629

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

43-4170, 28-0248, 28-1085, 28-0732, 25-8250
26-8419, 40-1516, 27-9825, 26-5782, 22-905
24-9758, 28-3429, 41-8445, 24-5119, 27-4630
27-4024, 28-2212

## மரண அறிவித்தல்

பிறப்பு: 10 - 12 - 1947



இறப்பு: 01 - 06 - 1993

### திரு. கிளேற்றன் நல்லையா

(உரிமையாளர்: ஒளி இல்லம் (BRIGHT HOUSE) அந்தியகால சேவை, பிரதான வீதி, யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதான வீதியைச் சேர்ந்தவரும், தற்போது றக்கா ஒழுங்கையில் வசித்து வந்தவருமான கிளேற்றன் நல்லையா அவர்கள் 01-06-93ல் காலமானார். இவர் காலம் சென்ற நல்லையா, திருமதி ஆசைமுத்து நல்லையா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், காலம் சென்ற சுதந்திரநாயகி (தேவி) அவர்களின் அன்புக் கணவரும், கஜன், எடித், ஜஸ்மின், பிரதீபன் ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், மாகிறேற், கில்டா,

## 1 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



| தமிழ்த் தாய் மடியில்: | வீரமண்ணின் முளையில்: |
|---|---|
| 12 | 03 |
| ★ | ★ |
| 09 | 06 |
| ★ | ★ |
| 1969 | 1992 |

### லெப்டினன்ட் ஈழவன்

(பிறேம் மாஸ்ரர்)

(ஐயாத்துரை சண்முகேஸ்வரன்
தேவரையாளி, நெல்லியடி வடக்கு, கரவெட்டி)

(யாழ். பத்தமேனிப் பகுதியில் இல. இராணுவக் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்தார்)

அந்த நாளை எண்ணி எண்ணி அழுகிறோமடா — நீ
ஆடித் திரிந்த பயிற்சி முகாமே சோகம் தானடா
அந்தி வானம் போல மனம் இருண்டதேனடா — உன்
அன்பை எண்ணி நாளும் நாங்கள் வாழுறோமடா
பயிற்ற வீரர் பாசம் நெஞ்சில் நிறையுதடா — உன்
பசுமை நினைவு எமது பணியை உயர்த்துதடா
உயர்ந்த உள்ளம் உனது என்று விளங்குதடா
உரிமை வெல்வோம் என்று நெஞ்சம் முழங்குதடா
வெறி பிடித்த நாய்களுடன் மோதினியடா — உன்
வெடி பிடித்து அவர்களன்று அடங்கினரடா
அறிவுரைக்கும் நண்பனாக பழகினியடா — உன்
அடி தொடர்ந்து நாங்களின்று செல்கிறோமடா.

''புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்''

[5028] -நண்பர்கள்

---

ஆரம்பம்: 3-06-93 வியாழன் 4-30 p. m.

தூய பிரயோக கணிதம்

திரு. குணசிங்கம், B. Sc. (Hons.)

விலங்கியல்

திரு. ஈஸ்வரதாசன், B.Sc (Cey.) Dip in Ed.

★ 95 A/L ஆரம்பத்தில் இருந்து அனுமதி வழங்கப்படும்.
★ 94 A/L புதிய விலங்கியல் வகுப்பு ஆரம்பமாகவுள்ளது
★ 93 A/L Zoology Model Question Paper Class ஆரம்பமாக உள்ளது.
★ நேர அட்டவணையை நிறுவனத்தில் பெறலாம்.

(சி-6729) –நிர்வாகி

---

சாவகச்சேரி

## தெய்வேந்திரா திரை அரங்கில்

முல்லை மாவட்டக் கலைஞர்களின்

முதலாவதுவெற்றிப்படைப்பு

## "தமிழோசை"

தினசரி மாலை 4 மணி 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10-30, மாலை 4 மணி, 6 மணி

---

உங்கள் நாட்டிலுள்ள எமது முகவர் ஊடாக அனுப்பவும். எமது முகவர், குளோப் வர்த்தக ஏஜென்சி லிமிட்டெட் 40/1, டிக்மன்ஸ் வீதி, கொழும்பு. உங்கள் பதிலை எதிர்பார்க்கின்றோம்'' என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஹேமாவை

அதன் ஒரு கட்டமாகவே ஜனாதிபதியை சந்திக்க அவர்கள் விருப்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை திருமதி ஹேமா பிரேமதாசா தற்பொழுது சுகவீனமுற்று இருப்பதாகவும் அவருக்கு தறபோது பூரண ஓய்வு தேவை என வைத்தியர்களால் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் 'லக்திவ' பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

### பிளவுறும்

றதாகவும் மாகாண ஆளுநர் வீட்டுக்கு இவர் அண்மையில் சென்று வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### வட–கிழக்கு

மாவட்டங்களாக அமையலாம் என்பதே இந்த யோசனையாகும்.

சட்டவாக்க அமைப்பில் 64 வீதமானவர்கள் தமிழ்ப் பிரதிநிதிகளாக இருப்பர். சுமார் 20 வீதத்தினர் முஸ்லிம் பிரதிநிதிகளாக இருப்பர்.

திருக்கோணமலை போன்ற மூன்று இனமக்களும் வாழும் மாவட்டத்தில் மூன்று தமிழ் பிரதிநிதிகள், மூன்று முஸ்லிம் பிரதிநிதிகள், இரண்டு பெரும்பான்மை இன பிரதிநிதிகள் என்ற வகையில் பிரதிநிதித்துவம் அமையும்.

பிராந்திய அடிப்படையிலான தேசிய பட்டியலில் தெரிவான பிரதிநிதிகளும் சட்டவாக்க நிர்வாக சபையில் அங்கம் வகிப்பார்கள் என்றும் கே. கணேசலிங்கம் தனது யோசனையில் தெரிவித்துள்ளார்.

---



| 10 | 01 |
|---|---|
| - | - |
| 12 | 06 |
| - | - |
| 1947 | 1993 |

### திரு. கிளேற்றன் நல்லையா

(உரிமையாளர்: ஒளி இல்லம் (BRIGHT HOUSE)
அந்தியகால சேவை, பிரதான வீதி, யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதான வீதியைச் சேர்ந்தவரும், தற்போது றக்கா ஒழுங்கையில் வசித்து வந்தவருமான கிளேற்றன் நல்லையா அவர்கள் 01-06-93ல் காலமானார். இவர் காலம் சென்ற நல்லையா, திருமதி ஆசைமுத்து நல்லையா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், காலம் சென்ற சுதந்திரநாயகி (தேவி) அவர்களின் அன்புக் கணவரும், கஜன், எடித், ஜஸ்மின், பிரதீபன் ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், மாகிறேற், கில்டா, விமலா, கமலா, பற்றிமா, யோண் ஒவ் ஆர்க், கிப்சன். றட்சன், றெனோல்ட்டா, பிரியதர்சினி, அன்ரன், டுசான் ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலம் சென்ற யோசேப் (றோஸ் ஆட்ஸ்), திருமதி நல்லம்மா யோசேப் ஆகியோரின் அன்பு மருமகனும், ஜெயசீலி, ஜெயராணி, ஜெயவதி, பேணாட், ஜெ. ராஜா, ஜெயசோதி அருட் சகோதரி லூசியா (திருச்சிலுவைக் கன்னியர் மடம்), ஜெயக்குமார். ஜெயமலர், தாசன் ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.


அன்னாரது பூதவுடல் 03-06-93 வியாழன் (இன்று) பிற்பகல் 3-00 மணியளவில் 16, றக்கா ஒழுங்கையிலுள்ள இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ். பேராலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். அனைவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. ஜேக்கப் புஸ்பராசா
(சகலன்)

(5027)

---

## 7-வது ஆண்டுநினைவஞ்சலி



### வீரவேங்கை தீபன்

(திருநாவுக்கரசு பிரதீபன்)

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 29-5-1964 | 3-6-1986 |

உதித்தெழுந்து பிரகாசிக்கு முன்
உதிர்ந்து விட்ட வீரனே
எங்கள் செல்வமே பிரதீபா
உன் நினைவால் நெஞ்சம்
துடிக்கின்றது.

பிரதீபன் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(5022)

உன் பிரிவால் துடிக்கும்
பெற்றோர், உறவினர்
நண்பர்கள்.

---

இரண்டு ஆண்டு நிறைவு!
03-06-93
மூன்றாவது ஆண்டு மலர்வு!

## மின்வளம்

நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்

ரி. வி., கசற்றேடியோ, வீடியோ ஒடியோடெக், கடிகாரங்கள், மணிக்கூட்டுப் பற்றிகள் மற்றும் எலக்றோனிக் பொருள்களுக்கு நம்பிக்கையான இடம்

## மின்வளம்

ஒலி, ஒளி பதிவுசெய்தல் - கொள்வனவும், விற்பனவும்,
சீர்செய்தலும் - யாவற்றிற்கும் ஒரே இடம்:

## மின்வளம்

81, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

[சி-6755]

---

### திருமண நன்றி நவிலல்

எமது அழைப்பை ஏற்று 22-05-93இல் நடைபெற்ற திருமணத்திலும் அதனைத் தொடர்ந்த வரவேற்புபசாரங்களிலும் கலந்துகொண்டு சிறப்பித்த யாவர்க்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அருள்நாயகம்
தம்பதிகள்.

(சி-6753)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது